1975 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போது பொதுப் பணித்துறைக்கு அனுப்பப்பட்டு இருக்கும். அவர்கள் டெண்டர் முதலானவைகளைக் கேட்டு கட்டச் செய்வார்கள்.

Special allowances for Doctors.

*112 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(a) whether any extra allowances are paid to the doctors who conduct post-mortem cases; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: கிராமப் பகுதிகளிலே கொலை போன்று ஏதாவது ஏற்பட்டுவிட்டால் போஸ்ட்மார்ட்டம் செய்வதற்கு உடனடியாக டாக்டர் இல்லாத நிலையில் அவர்கள் லீவ் போட்டுவிடுகிறார்கள். ஆகவே, தாலுகா ஹெட்க்வார்ட்டர்ஸ் மருத்துவமனைக்கு 10, 12 மைல்கள் கடந்து கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. அதற்காக தனியாக ஸ்பெஷல் அலவன்ஸ் என்று கொடுத்தால் அவர்கள் இருப்பார்கள். ஆகவே, அதை கிராமத்திலேயே செய்யக்கூடிய முயற்சியை அரசாங்கம் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, போஸ்ட் மார்ட்டம் செய்வது என்பது அது சம்பந்தமாக பின்னாலே வழக்கு ஏதாவது வருமானால் அந்த வழக்கிலே தக்க சான்றுகள் அவர்கள் முறைப்படி கொடுப்பதற்காக கடமைப் பட்டு இருக்கக்கூடிய காரியமாகும். மருத்துவத் துறையிலே இருக்கிற யாராக இருந்தாலும் அன்றாடம் அவர்கள் செய்கின்ற கடமைகளிலே இதுவும் ஒன்றாகச் செய்யப்படக்கூடிய முறையில் இருக்கவேண்டும். ஆகவே, அலவன்ஸ் கொடுப்பது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. கிராமத்திலே உள்ள டாக்டர்கள் தனித்தனியாக போஸ்ட் மார்ட்டம் செய்வது என்று வைத்தால் சட்டப் பிரச்னை, சிக்கல்கள் எல்லாம் உண்டாகும். ஆகவே, தாலுகா மருத்துவமனை அளவில் இது ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. அங்கே போஸ்ட் மார்ட்டம் செய்வதுதான் பொருத்தமானதாகும்.

[1975 அக்டோபர் 29

திரு. இராம. அரங்கண்ணல்: சென்னை மாநகரத்திலே போஸ்ட் மார்ட்டம் செய்கிற கேஸ்களை ஒரு நாள் கழித்து செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் இறந்துபோனவர்களுடைய பிரேதங்களைப் பெறுவதிலே ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே, எப்படியும் அன்றைய தினம் மாலை 6 மணிக் குள்ளாக கொடுத்துவிடவேண்டுமென்று உத்தரவிடப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இறந்துபோகிறவர்கள் காலை 10 மணிக்குள் இறந்துபோவதாக ஒப்பந்தம் செய்துகொடுப் பார்களானால் மாலை 6 மணிக்குள் அவர்களுடைய பிரேதங்களைக் கொடுக்கலாம். ஆனால், இறந்துபோனவர்கள் மாலை 4 மணிக்கு இறந்துவிட்டால் மாலை 6 மணிக்குள்ளாகவே கொடுக்கக்கூடிய— காலையிலே பணியாற்றிய டாக்டர்கள் மாலையிலும் பணியாற்றக் கூடிய நிலைமை இல்லை—வசதி இல்லை. ஒரே மருத்துவ மனையிலே செய்வதற்குப் பதிலாக ஸ்டான்லி மருத்துவமனையிலேயும், மற்ற மருத்துவமனைகளிலேயும் செய்ய வேண்டுமென்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. அது நடைமுறைக்கு வருவதுபற்றி நான் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேன்.

கிராம மருத்துவமனை மருத்துவர்கள் முறையீடு

* 113 **வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கிராம மருத்துவமனை மருத்துவர்கள் சங்கத்தின் சார்பில் 4—4—1974 அன்று கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர் களுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அரசின் பரிசீலனையின் பலனாக அண்மையிலே கிராம மருத்துவர்களுடைய ஊதியத்தை மானியமாக வழங்குகிற முறையிலே உயர்த்தி வழங்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே